**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.309 / 2023**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 20.11.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : **முத்துலட்சுமி** | Age | : |
| Husband's Name | : **சக்திவேல்** | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் இம் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | | மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | | வங்கி கணக்கு புத்தகம் | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | | விபத்து பதிவேடு | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | | காயச்சான்று | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.6 | | திருச்சி அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.7 | | மருத்துவ பில்கள் (ரூ.8,084/-) | அசல் |
| ம.சா.ஆ.8 | | மனுதாரரின் புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.9 | | TN 47 AJ 2997 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.10 | | TN 47 BA 2289 என்ற பதிவெண் | பதிவிறக்க நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்ட இரு சக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை | |
| ம.சா.ஆ.11 | | குற்ற இறுதி அறிக்கை | பதிவிறக்க நகல் |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றார். நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது. எனது கணவர்தான் இரு சக்கர வாகனத்தை கவனமில்லாமல் ஓட்டி விபத்து ஏற்படுத்தினார் எ ன்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடத்தில் சாலையின் நடுவில் தடுப்பு உள்ளது என்றால் சரிதான். விபத்து காயத்திற்கும், நான் சிகிச்சை எடுத்துக் கொண்ட ஆவணங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞராக உள்ளேன். எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயம் எனக்கு குணமடைந்துவிட்டது என்றாலும், 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |